செ.வெ.எண்:917/2016 நாள்: 29.12.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து உணவு தயாரிப்பு நிறுவனங்கள், உணவு சேகரிப்பு நிறுவனங்கள், மறு பொட்டலமிடுபவர்கள், உணவகம் நடத்துபவர்கள், பேக்கரி, தேநீர் விற்பனையகங்கள், மளிகைக்கடை நடத்துபவர்கள், இறைச்சி விற்பனை செய்பவர்கள் (ஆடு, மாடு, கோழி, மீன்), விநியோகஸ்தர்கள், எண்ணெய் உற்பத்தியாளர்கள், எண்ணெய் விற்பனையாளர்கள், தனியார் பால் குளிரூட்டும் நிறுவனங்கள், பால் விற்பனை நிலையங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனையகங்கள், இட்லி, தோசை மாவு அரைத்து விற்பனை செய்பவர்கள், மதுபான கூடங்கள் மற்றும் பார்கள் பள்ளி மற்றும் கல்லூரி உணவு விடுதி கேண்டீன்கள், உணவுப் பொருள்களை வாகனத்தில் எடுத்து செல்பவர்கள், வாகனத்தில் வைத்து விற்பனை செய்பவர்கள் வரை அனைத்து உணவுப்பொருட்களையும் தயாரிப்பு நிலையிலிருந்து பொதுமக்கள் உண்ணும் நிலை வரை உள்ள அனைத்து நிலையில் உணவு வணிகம் மேற்கொள்பவர்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 – ன் கீழ் உரிமம் அல்லது பதிவுச்சான்று பெற்றுக் கொள்ள வேண்டும். உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 இந்தியா முழுவதும் 05.08.2011 முதல் அமல்படுத்தப்பட்டது. உரிமம் அல்லது பதிவுச்சான்று பெற்றுக் கொள்பவதற்கான காலக்கெடு கடந்த ஆகஸ்ட் 4/2016 – ம் தேதியுடன் முடிவடைந்துவிட்டது.

மேலும் தங்களது ஆண்டு வணிக மதிப்பு 12 லட்சத்திற்கு மேல் விற்பனை செய்யும் வியாபார நிறுவனங்கள் உரிமமும், தங்களுடைய வியாபாரத்தின் மதிப்பு ஆண்டிற்கு ரு. 12 லட்சத்திற்கும் கீழ் இருந்தால் பதிவு சான்றும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின் கீழ் உரிமம் அல்லது பதிவுச்சான்று பெறாமல் உணவு வணிகம் மேற்கொள்வது சட்டப்படி குற்றமாகும். உரிமம் அல்லது பதிவுச் சான்று இல்லாமல் உணவு வணிகம் நடத்தப்படுவது ஆய்வின்போது கண்டறியப்பட்டால் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 – ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அபராதம் விதிக்கப்படும். எனவே உணவு வணிகர்கள் தாங்களே முன்வந்து உடனடியாக தங்களது வணிகத்திற்கு உரிமம் அல்லது பதிவுச்சான்று பெற்றிட வேண்டும். மேலும் உரிமம் மற்றும் பதிவுச்சான்று தொடர்பான விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட நகர, வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர்களையோ, மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட நியமன அலுவலா் மரு. ஆா். கருணாகரன் அவா்களை 9994446674 என்ற எண்ணிலும், நாகா்கோவில் நகர பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. எம். குமாரபாண்டியன் அவா்களை 9047092900 என்ற எண்ணிலும், உணவு பாதுகாப்பு அலுவலா் எம். சங்கரநாராயணன் அவா்களை 8903123465 என்ற எண்ணிலும், ராஜாக்கமங்கலம் வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. எல். சிதம்பரதாணுபிள்ளை அவா்களை 9442281969 என்ற எண்ணிலும் தோவாளை வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. எஸ். அஜய்குமாா் அவா்களை 9486633905 என்ற எண்ணிலும் அகஸ்தீஸ்வர வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. ஆா்.எம். பிரவீன் ரகு அவா்களை 9487641649 என்ற எண்ணிலும் தக்கலை வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. ஐ. வின்சென்ட் கிளாட்சன் அவா்களை 9443412689 என்ற எண்ணிலும் முஞ்சிறை மற்றும் மேல்புறம் வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. எஸ். ராஜன் அவா்களை 9442994569 என்ற எண்ணிலும் திருவட்டாா் வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. ஆ. சிதம்பரம் அவா்களை 9840576892 என்ற எண்ணிலும் கிள்ளியூா் வட்டார பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. வி. ரஞ்சித்குமாா் அவா்களை 9943868710 என்ற எண்ணிலும் குருந்தன்கோடு வட்டாரம் மற்றும் குளச்சல் நகர பகுதிகளுக்கு உணவு பாதுகாப்பு அலுவலா் திரு. டி. சிறில்ராஜ் அவா்களை 9443102180 என்ற எண்ணிலும் தொடா்பு கொள்ளலாம்.

மேலும் நுகா்வோா் தங்களது குறைகளைத் தெரிவிக்க நியமன அலுவலா் அலுவலகம், உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிா்வாகத்துறை, 36, சன்னதிதெரு, கிருஷ்ணன்கோவில், நாகா்கோவில் - 1 என்ற முகவரியிலும், அலுவலக தொலைபேசி எண் 04652 – 276786 மூலமும் தொடா்பு கொள்ளலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவா்
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.